# சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட்

சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு பைனான்ஸ் நிறுவனம், மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், ரூ.136 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் ரூ.91 கோடியாக இருந்தது. ஆக, நிகர லாபம் 50 சதவீதம் உயர்ந்துள்ளது. மொத்த வாராக் கடன் 3.12 சதவீதமாகவும், நிகர வாராக்கடன் 2.03 சதவீதமாகவும் உள்ளது. நிகர வருவாய் வரம்பு 8 சதவீதமாக உள்ளது.

இந்நிறுவனம் வழங்கிய வாகன கடன் ரூ.2,795 கோடியிலிருந்து ரூ.2,564 கோடியாக குறைந்துள்ளது. வழங்கிய வீட்டு கடன் 9 சதவீதம் உயர்ந்து ரூ.857 கோடியாக அதிகரித்துள்ளது. நிறுவனத்தின் மூலதன இருப்பு விகிதம் 21.24 சதவீதமாக உள்ளது.